# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

**வழக்கு எண்.24226/விசாரணை/2009**

**<u>விசாரணை நடைபெற்ற நாள் 27.01.2010.</u>**

| | |
|---|---|
| முன்னிலை: | முனைவர் (திருமதி) சாரதா நம்பி ஆரூரன்,<br>எம்.ஏ.,எம்.ஃபில்,,பி.எச்,டி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர்: | திரு V.சிவராமன்,<br>த/பெ.வைரவநாதன்,<br>167, வேளச்சேரி மெயின் ரோடு,<br>காமராஜபுரம், சென்னை – 600 073. |
| பொது அதிகார அமைப்பு: | பொதுத் தகவல் அலுவலர்,<br>கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம்,<br>பேசின் பாலம் எரிவாயு சுழலி மின் நிலையம்,<br>பேசின் பாலம், சென்னை – 600 012. |

*****

மனுதாரர் திரு V.சிவராமன் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் திரு T.செல்வராஜன், பேசின் பாலம் எரிவாயு சுழலி மின் நிலையம், சென்னை இன்று (27.01.2010) இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரர் 04.02.2009 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப் பிரிவு 6(1)–ன் கீழ் பொதுத் தகவல் அலுவலர், பேசின் பாலம் எரிவாயு சுழலி மின் நிலையத்தில் களவு போன ஸ்பேர் வைண்டிங் குறித்துத் தகவல் கேட்டிருக்கின்றார். தகவல் பெறாததால் 15.06.2009 அன்று மனுதாரர் சட்டப் பிரிவு 19(1)–ன்கீழ் பொதுத் தகவல் அலுவலர், எரிசக்தித் துறை, சென்னை–9 அவர்களிடம் மேல் முறையீடு செய்துள்ளார். 07.09.2009 அன்று மனுதாரருக்குத் தகவல் அளிக்கப்பட்டுள்ளது. பெற்ற தகவல் முழுமையாக இல்லாததால் 23.09.2009 அன்று சட்டப் பிரிவு 19(3)–ன் கீழ் ஆணையத்திற்கு மேல் முறையீடு செய்ததன் அடிப்படையில் வழக்கு இன்று (27.01.2010) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

ஸ்பேர் வைண்டிங் திருடு போனது குறித்துப் பதிவு செய்த FIR –ன் நகல் மனுதாரருக்கு அளிக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக வேறு ஆவணங்கள் அலுவலகத்தில் ஏதுமில்லையெனவும் பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்துள்ளார். மேலும் பண்டகச்சாலை பொருட்கள் ஒப்படைப்புப் பணியும், திரு குப்பன் அவர்களின் பொருள் ஆய்வுப் பணியும் ஒரே நேரத்தில் மேற்கொள்ளப்பட்டதை அடையாளம் காட்டும் ஆவணத்தின் நகலும் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொருட்கள் ஒப்படைப்பு நடந்த காலம் 16.07.2007 முதல் 05.12.2007 வரை (143 நாட்கள்), பொருள் ஆய்வுப் பணி நடந்த காலம் 02.08.2007 முதல் 05.12.2007 வரை (126 நாட்கள்). இவ்விரு நிகழ்வுகளும் 126 நாட்கள் ஒரே நேரத்தில் நடந்துள்ளதாகவும், இது குறித்து மனுதாரருக்கு வழங்கப்பட்ட ஆவணங்களில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக சிறப்பு அதிகாரம் வழங்கப்பட்ட ஆணையின் நகல் மனுதாரர் கேட்டுள்ளார். அப்படி ஒரு ஆவணம் என்றுமே ஏற்படுத்தப்படவில்லை என்றும் தகவல் அளிக்கப்பட்டுள்ளது. மனுதாரரைப் பொறுத்தவரை அவருக்குச் சில குறைகள் உள்ளன என்பதனை உணர முடிகின்றது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் அரசு கோப்புகளில் உள்ள தகவல்களைப் பெறுவதற்கு மனுதாரருக்கு முழு உரிமை உள்ளது. உரிய தகவல்களைப் பெற்றுக்கொண்டு உயர் அதிகாரிகளிடம் முறையிட்டுப் பரிகாரம் தெடிக்கொள்ளும்படி மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

**ஒப்புதல் பெறப்பட்ட நாள் 29.01.2010** **தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**(சு.மோகன தாஸ்)**
**உதவி பதிவாளர்**

பெறுநர்

<u>**வழக்கு எண்.24226/விசாரணை/2009**</u>

பொதுத் தகவல் அலுவலர்,
கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம்,
பேசின் பாலம் எரிவாயு சுழலி மின் நிலையம்,
பேசின் பாலம், சென்னை – 600 012.

திரு V.சிவராமன்,
த/பெ.வைரவநாதன்,
167, வேளச்சேரி மெயின் ரோடு,
காமராஜபுரம், சென்னை – 600 073.

*"ptl"*